முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1624

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**10.03.2024,** ஞாயிற்றுக்கிழமை

1. கருணாமூர்த்தியாய் அருளுகின்ற
கலியுக தவசியே அரங்கா வாழ்க
தர்மத்தின் காவலனாய் விளங்குகின்ற
தரணியின் தவராஜனே ஞான தேசிகனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் மாசி மாதம் 27 ம் நாள், 10.03.2024, ஞாயிற்றுக்கிழமை)
தாழ்விலா அரங்கன் வேதமும் ஞானமும்
தர்மமும் தரணியோர்க்கு பக்க பலமாக பாதுகாப்பாய் மாறி
3. மாறியே உலகோர்க்கு ஞானபலம்
மாண்புடனே தந்தருளக் கூடும்
ஆறுதலாய் அரங்கன் திருவடி பற்றி
அடிபணிந்து அரங்கன் அறத்தில் உதவி
4. தர்மபலம் கொண்டு விளங்கும் மக்களுக்கெல்லாம்
தணிகாசலன் என் காட்சியும் ஆசியும் உறுதிஉறுதி
உறுதிகொண்டு அரங்கன் தர்மத்திலும்
உயர்வான அரங்கன் உபதேசத்திலும்
5. கருதிவருகின்ற தொண்டர்கள் மனதிலும்
கருணையோடு சேவை ஆற்றுகின்ற சீடர் படைகளுக்குள்ளும்
உள்ளாக ஆறுமுகன் யான் உயர்வாக இறங்கி
அனுகூலமும் ஆசியும் அற்புதமும் நடத்துகின்றேன்
6. குறைவின்றி அரங்கன் தொண்டர் படைக்கொண்டே
குவலயத்தில் மாற்றம் ஆறுமுகன் யான் நிகழ்த்துவேன்
வகைபட அன்னதனால் கலியுக மக்கள்
வணங்கி அரங்கன் திருவடி பற்றி

7. ஓங்காரக்குடில் தொடர்போடு உயர்வாக
ஜீவதயவு நெறிபட நடந்து தர்மத்தைச் செய்து வர
வருகவே வையகத்தில் பெருமாற்றம்
வடிவேலன் யான் அரங்கன் அவதாரமாக நிகழ்த்துவேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–